**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 54** **நாள் : 23.01.2026**

**மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக ரூ.15.91 கோடி மதிப்பீட்டில் தீவுத்திடல் மற்றும் இராயபுரம் என்.ஆர்.டி. பாலம் அருகில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையங்களை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், பிராட்வே பேருந்து நிலையம் மறுசீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற இருப்பதால் பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக, துறைமுகம் சட்டமன்ற தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-59, தீவுத்திடலில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.8.44 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையம் மற்றும் இராயபுரம் என்.ஆர்.டி. பாலம் அருகில் உள்ள துறைமுக நிலத்தில் ரூ.7.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தினை இன்று (23.01.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக, தீவுத்திடல் மற்றும் ராயபுரம் தற்காலிக பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் நாளை (24.01.2026) முதல் இயங்கும்.

தொடர்ந்து, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், இராயபுரம் மண்டலம், வார்டு-60க்குட்பட்ட அன்னை சத்யா நகரில் மாநகராட்சியின் சார்பில் 27.87 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.9.98 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட B-3 கோட்டை புறக்காவல் நிலையத்திற்கான காவல் உதவி மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

தொடர்ச்சியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலம், வார்டு-57, வால்டாக்ஸ் சாலை, வ.உ.சி. சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.13.43 கோடி மதிப்பீட்டில் குளிர் சாதன வசதி மற்றும் வாகன நிறுத்தம் வசதிகளுடன் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்திற்கான கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா

பிள்ளை தெருவில், கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடல் என "ஒருங்கிணைந்த வளாகம்" கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரரை அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் சந்திரயோகி சமாதி சாலையில் சிஎம்டிஏ சார்பில் ரூ.21.50 கோடி மதிப்பில் 2,767 சதுர மீட்டர் பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டு வரும் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை இறுதிக்கட்டப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தி, அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகரப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு.த.பிரபுசங்கர், இ.ஆ.ப., (மத்தியம்), காவல் கூடுதல் ஆணையாளர் (வடக்கு) திரு.பிரவேஷ் குமார் இ.கா.ப., காவல் இணை ஆணையாளர் திரு.மு.மனோகர் இ.கா.ப., காவல் துணை ஆணையாளர் திரு.பி.சுந்தரவடிவேல் இ.கா.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக தீவுத்திடல் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தின் சிறப்பம்சங்கள்**

இந்த பேருந்து முனையம் 10713 சதுர மீட்டர் பரப்பளவில் 280 மீட்டர் நீளம் மற்றும் 38 மீட்டர் அகலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 34 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்துமிடங்கள், 60 இருக்கைகள் (RCC Bench), 2 ஆண்கள் கழிப்பறை, 2 பெண்கள் கழிப்பறை, அலுவலர்கள் ஆண்/பெண் கழிப்பறைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் கழிப்பறை, நேரக்காப்பாளர் அறை, ஓட்டுநர், நடத்துநர் உணவருந்தும் அறை, அலுவலக அறை, ஆவின் பாலகம், 3 குடிநீர் ATM , 2 காவல் நிலைய அறைகள், 15 எண்ணிக்கையிலான சிறு கடைகள், சீசன் டிக்கெட் அறை, 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 குடிநீர் தொட்டிகள், 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 கழிவறைத் தொட்டிகள், 150 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடம் உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இதில் நாளொன்றுக்கு 73 பேருந்து வழித்தடங்கள் மற்றும் 526 பேருந்துகள் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தின் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் பயணிகள் பயனடைவர்.

**பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக இராயபுரம் என்.ஆர்.டி மேம்பாலம் அருகில் கட்டப்பட்டுள்ள தற்காலிக பேருந்து நிலையத்தின் சிறப்பம்சங்கள்**

இராயபுரம் என்.ஆர்.டி. மேம்பாலம் அருகில் இப்ராஹிம்ஜி சாலையில் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திற்குச் சொந்தமான 14,000 சதுர மீட்டர் (3.46 ஏக்கர்) பரப்பளவு கொண்ட காலி நிலத்தில் ரூ.7.47 கோடி மதிப்பீட்டில் தற்காலிக பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பேருந்து முனையத்தில் 55 பேருந்து நிறுத்தங்கள், 65 இருக்கைகள் (RCC), 900 சதுர மீட்டர் நிழற்குடையுடன் கூடிய பயணிகள் நடைபாதை, 5300 சதுர மீட்டர் புதிய தார்சாலை, 12 மீட்டர் உயரம் கொண்ட 35 தெருவிளக்குகள், 31 எல்.இ.டி. விளக்குகள், 200 சதுர மீட்டர் பரப்பளவில் 50 இருக்கைகளுடன் பயணிகள் காத்திருப்புக் கூடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ஆவின் பாலகம், சுற்றுப்புறப் பகுதிகளில் 250 மீட்டர் மழைநீர் வடிகால் வசதி, 200 மீட்டர் கழிவுநீர் கால்வாய் வசதி, 21 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, முதலுதவி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அறை, பணியாளர்களுக்கான உணவருந்தும் அறை, பயணச்சீட்டு விற்பனை மையம், 10 இருக்கைகள் கொண்ட ஆண்கள் கழிப்பறை, 18 இருக்கைகள் கொண்ட பெண்கள் கழிப்பறை, 62 சிறுநீர் கழிப்பிடங்கள் உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் நாளொன்றுக்கு 67 பேருந்து வழித்தடங்கள் மற்றும் 1,463 பேருந்துகள் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தின் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணிகள் பயனடைவர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**